
## வகுப்பு 7 (தமிழ்)

| பரிந்துரைக்கப்படும் கற்பித்தல் செயல் முறைகள் | கற்றல் விளைவுகள் |
|---|---|
| **கற்போருக்கு தனியாகவோ / இணையாகவோ / குழுவாகவோ / கற்க உதவும் வாய்ப்புகளை வழங்கி கீழ்க்காண்பனவற்றைப் ஊக்கப்படுத்த வேண்டும்.**<br>• தங்கள் சொந்தமொழியில் பேசவும் கலந்துரையாடவும் வாய்ப்பளித்தல்.<br>• தாங்கள் பயன்படுத்தும் மொழியின் நுட்பமான கூறுகள் குறித்துக் கலந்துரையாட வாய்ப்பளித்தல்.<br>• மாணவர்கள் தங்களுக்குள் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும், வினாக்கள் எழுப்பவும் குழுவாகச் செயல்படவும் சுதந்தரம் அளித்தல்.<br>• தமிழுடன் தங்களது சொந்த மொழியில் உள்ளவற்றைப் படிக்கவும், எடுத்துரைக்கவும் வசதி செய்து தரல் (இச்செயல்பாடுகளில் ஈடுபட பிரெய்லி மற்றும் சைகை மொழிப் பொருள்கள் அளித்திடல் வேண்டும்)<br>• தாங்கள் வாழும் சமூகம், காலம் சுற்றுப்புறம் பற்றிய கட்டுரைகளைப் படிக்கவும், கலந்துரையாடவும் வாய்ப்பளித்தல்.<br>• சொல் விளையாட்டு, அலுவல் சாராத கடிதங்கள், ஒலி இயைபுகள், புதிர்கள், நினைவலைகள் போன்ற செயல்பாடுகளைத் தங்கள் சொந்தமொழியில் எழுத வாய்ப்பளித்தல்.<br>• செய்தித்தாள் / இதழ்கள் படித்தல், திரைப்படங்களைத் திரையிடல், காட்சி கேள்விப் பொருள்களைக் கண்டு, கேட்டு, உணரச் செய்தல் ஆகியவற்றின்வழி விழிப்புணர்வையும் செயல்பாட்டினையும் மேம்படுத்திக்கொள்ள வாய்ப்பளித்தல். | **கற்போர்**<br>• வெவ்வேறு பாடப் பொருள்களைப் படிக்கவும் அவற்றைக் குழுக்களில் கலந்துரையாடவும் செய்தல்.<br>• ஒன்றைப் படிக்கும்போது அந்தப் படைப்பாளி வேறு சூழல்களில் வெளியிட்ட சிந்தனைகளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்தலும், அக்கருத்துகளைத் தமது சொந்தக் கருத்துகளுடன் அனுபவங்களுடனும் ஒப்பிட்டு, தமது குறிப்பிட்ட கருத்துடன் படைப்பாளி ஒன்றுபடுதலையும் மாறுபடுதலையும் அறிதல்.<br>• தாம் பார்த்த ஓவியம் அல்லது காட்சியின் அனுபவத்தைத் தம் சொந்தச் சொற்களில் / சைகை மொழியில் வெளிப்படுத்தல்.<br>• தாங்கள் படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து அவற்றின்மீதான வினாக்கள் எழுப்புதல், கருத்தாடலைத் தொடங்கிவைத்தல் ஆகியவற்றின் மூலம் தங்களின் புரிதலை மேம்படுத்துதல்.<br>• தாங்கள் வாழும் சமூகம் அல்லது நிலப்பகுதிகள், நாட்டுப்புற இலக்கியங்கள், பாடல்கள் பற்றிக் கலந்துரையாடி அவற்றின் நயம் பாராட்டுதல்.<br>• பல்வேறு கலைகளில் (கைத்தொழில், கட்டடக் கலை, உழவுத்தொழில், நாட்டியம் போன்றவை) பயன்படுத்தப்படும் சொற்கள் பற்றி அறிய பேரார்வம் கொண்டு அவற்றைப் புரிந்துகொள்ள முயலுதல்.<br>• மழைக்காலங்களில் பசுமையான சூழலை ஏற்படுத்துதல்' போன்ற உள்ளூர் / சமூகம் / இயற்கை சார்ந்த தலைப்புகள் அல்லது |



இவற்றுள் மேற்கூறியவாறு செயல்பாடுகளின்மீது தங்கள் கருத்துரைகளை எழுத்து வடிவில் வெளியிட உதவுதல்.


- கற்பனைத் திறனையும், படைப்பாற்றலையும் மேம்படுத்தும் செயல்பாடுகளைச் செய்தல் வேண்டும். (நடிப்பு, கதை மாந்தர் பங்கேற்று உரையாடல், கதை வாசித்தல், எழுத்தில் புதியன புனைதல்) (creative writing) இருவர் உரையாடல், அறிக்கைகள் தாக்கல் செய்தல் போல்வன)
- பள்ளி / துறை / வகுப்பறை / சுவர் இதழ்கள் தொடங்குதலை ஊக்குவித்தல் வேண்டும்.

பிரச்சினைகள் தொடர்பாக தங்கள் தருக்கவியல் முடிவுகளை அளித்தல்.

- வெவ்வேறான உணர்ச்சிகரமான பாடப்பொருள் / பிரச்சனைகள் (சாதி, மதம், நிறம், பாலினம் சடங்குகள் போல்வன) மீது காரணகாரிய அடிப்படையில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துதல்.
- ஒன்றைப் படித்து முழுமையான பொருண்மையை உணர்ந்து அதன் பயன்பாட்டினைக் கூறுதல்.
- பாடப்பொருள் ஒன்றை நுட்பமாக நன்கு ஆய்ந்து அதில் சில சிறப்புக் கூறுகளைத் தேடிக் கண்டறிதல்.
- படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து வினாக்கள் எழுப்பி அவற்றை மேலும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முயலுதல்.
- பல்வேறு வகை படித்தலுக்கான செயல்பாடுகளில் அமைந்துள்ள வெவ்வேறு சொற்கள், சொற்றொடர்கள், சொலவடைகள் ஆகியனவற்றையும் புரிந்துகொண்டு நயம் பாராட்டுதல்.
- பல்வேறு கதைகள் / பாடல்களைப் படித்துப் பல்வேறு வகையான முறைகளையும் நடைகளையும் (வருணனை, உணர்வு சார்ந்தவை, இயற்கை வருணனை போன்றவை) இனங்காணல்.
- படிக்கும்போது வகுப்புத் தோழர்கள் மற்றும் ஆசிரியர்கள் உதவியுடன் பாடப்பொருள்களைப் புரிந்துகொள்வதுடன், அகராதிகள், பார்வை நூல்கள், வரைபடங்கள், இணையத்தளம் அல்லது பொருள்கள் ஆகியவற்றின் துணை கொண்டு பொருண்மையைத் தெளிவாக அறிதல்.



- பல்வேறு கலைகளிலும் தொழில்களிலும் (கைத்தொழில், கட்டடக்கலை, உழவு, நாட்டியம் முதலானவை) பயன்படுத்தும் மொழி பற்றிய கருத்தை ஆர்வமாக வெளிப்படுத்தல்.
- மொழி மரபின் நுட்பமான பயன்பாட்டுக் கூறுகளையும், பாடல்களில் படித்த ஒரு குறிப்பிட்ட சொல், சொற்றொடர்கள் போன்றவற்றின் பொருண்மை உணர்ந்து அவற்றையும் தமது உரையாடலில் வெளிப்படுத்துதல்.
- வெவ்வேறான சூழல்களில் மற்றவர்களால் கூறப்பட்ட சொற்களை [முறை சார்ந்த அல்லது தனி முறையிலான கூட்டங்கள் அல்லது நிகழ்வுகளின்போது வயதில் பெரியவர்கள் பயன்படுத்திய சொற்கள், தச்சர், குயவர், துணிதுவைப்பவர், முடிதிருத்துவோர் போன்ற தொழிலாளிகளுடன் பெரியவர்கள் உரையாடும்போது கேட்ட சொற்கள்] வேறு சூழல்களில் தாம் விரும்பியவாறு எழுதுதலில் பயன்படுத்துதல்.
- பல்வேறு செய்திகள் குறித்துச் செய்தித்தாள்கள், இதழ்கள், கதைகள், தகவல் கையேடுகள், இணையவழி நூல்கள் ஆகியவற்றைப் படித்தும், பார்த்தும் கிடைத்த புரிதலைக் கொண்டு, அவை பற்றிய தங்களின் விருப்புவெறுப்புகளை முன்னெடுத்துச் செல்லுதல் (பிரெய்லி எழுத்து அல்லது பொது எழுத்து முறைமையில்)
- தனிப்பட்ட அனுபவங்களைச் சொந்த நடையில் தமது மொழியில் வெளிப்படுத்துதல்.



- பல்வேறு பாடப்பொருள்களைப் பல்வேறு நோக்கங்களுக்காக எழுதும்பொழுது, பொருத்தமான சொற்கள், தொடரமைவுகள், சொற்றொடர், மரபுத்தொடர், நிறுத்தக்குறிகள் மற்றும் பிற இலக்கணக் கூறுகளைப் (காலம், பெயரடை, இணைச்சொற்கள்) பொருத்தமாகப் பயன்படுத்துதல்.
- சாதி, மதம், நிறம், பாலினம், சடங்குகள், பழக்கவழக்கங்கள் போன்ற உணர்வுப்பூர்வமான சிக்கல்களில் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்துதல்.
- பள்ளி / வகுப்பறை / சுவரொட்டிகளுக்காகச் செய்திகள் சேகரித்தல், உருவாக்குதல் அவற்றினைத் தொகுத்தல்.

